### வல்லம் தெற்கு ஒன்றியம்

**அமைப்பாளர் :** கா.தமிழ்வாணன், தையூர் (அ), செஞ்சி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) கு.முருகதாஸ், மொடையூர் (அ), செஞ்சி. (2) ஜெ.வெங்கட்ராமன், கல்லாங்குப்பம், மேல்சேவூர் (அ), செஞ்சி. (3) சே.அருண்குமார், கொங்கரப் பட்டு (அ), செஞ்சி. (4) தி.தியாகராஜன், கீழ்பாப்பாம்பாடி, திருவம்பட்டு (அ), செஞ்சி. (5) மு.அஸ்லாம் பாஷா, சொரத்தூர், கப்பை (அ), செஞ்சி. (6) கோ.ஸ்ரீதர், கப்பை (அ), செஞ்சி.

### ஒலக்கூர் கிழக்கு ஒன்றியம்

**அமைப்பாளர் :** ரா.சண்முகம், அண்டப்பட்டு (அ), திண்டிவனம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஆ.அரவிந்த்குமார், பாதிரி, ஒங்கூர் (அ), திண்டிவனம். (2) ஏ.சுரேந்தர், மங்கலம், ஆதனூர் (அ), திண்டிவனம். (3) பா.அம்பேத்கர், கீழ்க்கூடலூர், மேல்பேட்டை (அ), திண்டிவனம். (4) பா.பாலாஜி, அன்னப்பாக்கம், பாங்குளத்தூர்(அ), திண்டிவனம். (5) வே.அபிஷேக், 36, பள்ள தெரு, ஓங்கூர் (அ), திண்டிவனம்.

### ஒலக்கூர் மேற்கு ஒன்றியம்

**அமைப்பாளர் :** கா.ஜெயப்பிரகாஷ், எட்டியம்மன் கோவில் தெரு, கீழ்மாவிலங்கை (அ), திண்டிவனம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஏ.ஹேமநாதன், நெய்குப்பி, வைரபுரம் (அ), திண்டிவனம். (2) பா.சக்திவேல், பாஞ்சாலம் (அ), திண்டிவனம். (3) கோ.மணிகண்டன், வெள்ளிமேடுப் பேட்டை (அ), திண்டிவனம். (4) வெ.லோகேஷ், கோவிந்தாபுரம், கருவம்பாக்கம் (அ), திண்டிவனம். (5) ஆ.சுர்ஜித், 264, மேட்டுத் தெரு, மேல்பாக்கம், அய்யன்தோப்பு (அ), திண்டிவனம். (6) ரா.தினேஷ்குமார், 434/3, மந்தைவெளித் தெரு, ஊரல் (அ), திண்டிவனம்.

### திண்டிவனம் நகரம்

**அமைப்பாளர் :** கோ.சத்தீஷ். 34, மல்லிகைத் தெரு, திருவள்ளுவர் நகர், திண்டிவனம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ப.மகேஷ், 38/20, மீனாட்சி அம்மன் கோயில் தெரு, திண்டிவனம். (2) இ.ஸ்டீபன் ராஜ், 6.முனியன் தெரு, ரோஷணை, திண்டிவனம். (3) ர.ராஜசேகர், 16, ஏரிக்கோடி தெரு, திண்டிவனம். (4) அ.விஜய், 119, டி.வி. நகர், சென்னை நெடுஞ்சாலை, திண்டிவனம். (5) ஷே.முகமது இலியாஸ், 73ஏ/9, செஞ்சி சாலை, திண்டிவனம். (6) கு.அபிலாஷ், 19, பாரதிதாசன் பேட்டை, கிடங்கல்–1, திண்டிவனம். (7) ச.சஞ்சய், 30ஏ, கல்லூரிச் சாலை, பாரதிதாசன் நகர், திண்டிவனம்.

### அனந்தபுரம் பேரூர்

**அமைப்பாளர் :** இரா.தயாளன், 2, கீழ்ப் புதுத்தெரு, அனந்தபுரம் (அ), செஞ்சி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ரா.பொய்யாமொழி, 11/4, பு.நெ.5, மாரியம்மன் கோயில் தெரு, அனந்தபுரம் (அ), செஞ்சி. (2) ரா.தீர்த்தகிரி, 36, கீழ்ப் புதுத் தெரு, சித்தரசூர், அனந்தபுரம் (அ), செஞ்சி. (3) அ.பஹத் 6/5, பிள்ளையார் கோயில் தெரு, அனந்தபுரம் (அ), செஞ்சி. (4) ஏ.சந்திரன், மாரியம்மன் கோயில் தெரு, அனந்தபுரம் (அ), செஞ்சி.

### மரக்காணம் பேரூர்

**அமைப்பாளர்:** கு.கார்த்திகேயன், பாண்டி ரோடு, மரக்காணம் (அ), மரக்காணம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ம.கந்தன், மாரியம்மன் கோவில் தெரு கரிப்பாளையம், மரக்காணம் (அ), மரக்காணம். (2) பூ.விக்னேஷ், 57 மேற்கு தெரு, வசவன்குப்பம், தாழங்காடு (அ), மரக்காணம். (3) பாபுராம் பஸ்வான், நகரான் தெரு, மரக்காணம் (அ), விழுப்புரம். (4) ஏ.முத்துவேல், மாரியம்மன் கோயில் தெரு, பெரியமண்டவாய், மரக்காணம்.

### செஞ்சி பேரூர்

**அமைப்பாளர் :** அ.அன்புச்செல்வன், 11–ஏ, கொத்தமங்கலம் சாலை, கிருஷ்ணாபுரம், செஞ்சி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) க.சூர்யா, 8, வடக்குத் தெரு, புதுக் காலனி, சக்கராபுரம், செஞ்சி. (2) மு.சுரேஷ், 36–ஏ, பெரியண்ணன் தெரு, பீரங்கிமேடு, செஞ்சி. (3) அ.ராமச்சந்திரன், 4, சேப்பெருமாள் தெரு, பெரியகரம், செஞ்சி. (4) ஜா.பர்மான் ஷெரீஃப், 35, குளக்கரைத் தெரு, சக்கராபுரம், செஞ்சி.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 01–01–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

---

# புதுக்கோட்டையில் புதுமைப் பெண் திட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி – முன்னணியினர் பங்கேற்பு!

புதுக்கோட்டை ஜன.2

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு தலைமைச்சர் மு.க.ஸ்டாலின் புதுமைப் பெண்திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரியில் புதுமைப்பெண் திட்ட விரிவாக்கத்தை தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சியர் அருணா, தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி ஆகியோர் தொடங்கி வைத்தனர். மேலும் இதில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னதுரை, துணை மேயர் எம்.லியாகத் அலி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இதில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தாய் வழியில் ஆறாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்ற தகுதியான 1371 மாணவிகளில் 500 மாணவிகளுக்கு மாதம்தோறும் தலா 1000 பெறுவதற்கான டெபிட் கார்டுகளை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்:

அ.தி.மு.க. போராட்டம் என்பது எள்ளி நகைக்கக் கூடிய ஒன்று. அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் தான் பொள்ளாச்சி சம்பவம் நடைபெற்றது. அப்போது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க மாட்டேன் என்று அடங்காப்பிடாரித்தனமாக மறுத்தவர்கள் அவர்கள். கடைசியாக பல்வேறு போராட்டங்களை நடத்தி நாங்கள் அன்று நடவடிக்கை எடுக்க வைத்தோம்.

இன்று நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம் யாரையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் எங்களுக்கு கிடையாது இப்பொழுது அதிமுக போராட்டம் என்பதெல்லாம் வீண் வேஷம். நாங்கள் இருக்கிறோம் என்று காண்பித்து கொள்வதற்காக அ.தி.மு.க.வினர் இப்படி கபட நாடகத்தை நாடுகிறார்கள். தங்கள் மீது உள்ள குற்றச்சாட்டுகளை மறந்து விட்டு எங்கள் மீது பழி சுமத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு பார்க்கிறார்கள். பொள்ளாச்சி சம்பவம் ஒன்று போதும் அவர்கள் ஆட்சி காலத்தில் எப்படி இருந்தது என்று. அதற்குப் பிறகு என்னென்ன நடந்தது அவர்கள் ஆட்சியில் என்பதெல்லாம் ஏற்கனவே நான் விளக்கி விட்டேன்.

அண்ணா பல்கலைக் கழக வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்ற தேவை இல்லை என்று நீதிமன்றமே கூறி விட்டது. மூன்று துணை ஆணையர்களை நியமித்து விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழக வழக்கில் எஃப்.ஐ.ஆர். கசிந்த விவகாரம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. எஃப்.ஐ.ஆர். கசிந்தது யார் மூலமாக இருந்தாலும் நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட குழு விசாரித்து நடவடிக்கை எடுக்கும்.

இந்த ஆட்சியில் தான் பெண்களுக்கு பாதுகாப்பு இருக்கிறது. பெண்கள் வெளியே வருகிறார்கள். மகாத்மா காந்தி நடு இரவில் ஒரு பெண் தங்க நகைகளை அணிந்து கொண்டு சுதந்திரமாக நடமாடி சென்று பத்திரமாக வீடு திரும்பிகின்ற பொழுது சுதந்திரம் என்று தெரிவித்திருந்தார். அது இந்தியாவிலேயே கடைப்பிடிக்கக் கூடிய மாநிலமாக தமிழ்நாடு தான் இருக்கிறது. மற்ற மாநிலத்திற்கு எல்லாம் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் சென்று பார்த்துவிட்டு வரட்டும். அங்கு பெண்களின் நிலைமை எப்படி இருக்கிறது இரவு 10 மணிக்கு மேல் நடமாட முடிகிறதா என்று. நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகின்ற விஜய்க்கு இதைத்தான் பதிலாக சொல்கின்றோம். தயவு செய்து வெளியே சென்று பாருங்கள். பக்கத்து மாநிலம் பீகாரில் சென்று பாருங்கள் ஒரிசாவில் பாருங்கள் வேறு மாநிலத்திற்குச் சென்று பாருங்கள் அங்கே எல்லாம் பார்த்து விட்டு வந்து இந்தியாவிலேயே பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என்று நிரூபிக்கின்றோம். இல்லையென்றால் நீங்கள் என்ன சொன்னாலும் மக்கள் எங்களை நம்புவார்கள் மக்கள் மத்தியில் நாங்கள் விளக்குவோம்.

யார் அந்த சார் என்பது அந்த சாருக்கு தான் தெரியும். யார் அந்த சார் என்பது விசாரணையில் தெரியவரும் நாங்கள் இல்லை அந்த சார் எல்லாம்.

அரசு விதிகளுக்கு உட்பட்டதால் அரசு அதிகாரிகள் பேட்டி கொடுக்கிறார்கள். இந்த விவகாரத்தில் அதிகாரிகள் அவசரப்பட்டார்களா என்பதை ஐ.பி.எஸ். படித்த மூன்று பெண் துணை ஆணையர்களை நீதிமன்றம் நியமித்துள்ளது. அந்தக் குழு விசாரித்து உண்மையை வெளிக் கொண்டுவரும்.

எங்கடா காலையில் பிணம் விழும் என்று பிணம் கொத்தி கழுகு என்று சொல்வதை போல எந்த பிணமாவது விழுந்தால் அதை வைத்து அரசியல் ஆதாயம் தேடலாமா என்று பார்க்கின்ற பரிதாபகரமான நிலையில் லண்டன் சென்று படித்துவிட்டு வந்திருக்கின்ற பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலையின் நிலைமை இருக்கிறது என்று தெரிவித்தார்.

---

# மதுரையில் வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

மதுரை, ஜன.2-

மதுரையில் நடைபெற்ற மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி, மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் தேவசேனன், தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சிவனேசன், தலைமை கழக வழக்கறிஞர் ராஜா முகமது ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாநில சட்டத் துறை இணைச் செயலாளர், தலைமைக் கழக வழக்கறிஞர் ரவிச்சந்திரன் கூட்டத்தில் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாநில வழக்கறிஞர் அணியினர், மாவட்ட வழக்கறிஞர் அணியினர், வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், திரளான வழக்கறிஞர் அணியினர் கலந்து கொண்டனர்.

